# கொழும்பு பல்கலைக்கழகம், இலங்கை
## கலைத்துறை
## இளங்கலைமாணி முதலாமாண்டு தேர்வு (பொருளியல்)
## இரண்டாம் அரையாண்டுப்பருவ இறுதித் பரீட்சை – 2024/2025
## ECN 1202 – ஆரம்ப பேரினப் பொருளியல்

நேரம்: இரண்டு (02) மணித்தியாலங்கள் மட்டும்

ஏதேனும் **நான்கு (04)** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.

---

1. அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் ஏப்ரல் 2, 2025 அன்று சுமார் 90 நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு வரிகளை அறிவித்தார். இந்த வரிகளில் அமெரிக்காவிற்குள் நுழையும் அனைத்து இறக்குமதிகளுக்கும் பரஸ்பர 10% பொது வரிகள் அடங்கும். மேலும், அமெரிக்காவின் கூற்றுப்படி, இலங்கை 44 சதவீத வரியை செலுத்த வேண்டும், இது அமெரிக்கா மீது இலங்கை விதிக்கும் வரிகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அண்ணளவாக பாதிக்கு கழிவு செய்யபட்ட பரஸ்பர வரியாகும். இருப்பினும் இந்த புதிய வரிகளின் விளைவுகள் இலங்கை போன்ற சிறிய பொருளாதாரங்களுக்கு குறிப்பாக பேரழிவை ஏற்படுத்தும்.
   I) டிரம்பின் வரி விதிப்புகளால் இலங்கைப் பொருளாதாரம் எதிர்கொள்ளும் உடனடி சவால்கள் எவை என்பதை சுருக்கமாக விவாதிக்கவும்.
   (09 புள்ளிகள்)
   II) ஏற்றுமதியில் ஏற்படும் பாதகமான விளைவுகளிலிருந்து மீண்டெழுவதற்கு இலங்கைக்குத் தேவையான குறுகிய கால பேரினப் பொருளாதாரத் தீர்வுகள் யாவை?
   (08 புள்ளிகள்)
   III) இலங்கை ஏற்றுமதிகளில் தற்போதைய கொந்தளிப்பான வர்த்தக சூழ்நிலையைத் தணிப்பதற்கு நீங்கள் பரிந்துரைக்கும் நீண்டகால பேரினப் பொருளாதார தீர்வுகள் யாவை?
   (08 புள்ளிகள்)

2. பொதுத்துறை ஊழியர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் அடிப்படை சம்பளத்தை அதிகரிக்கவும் அரசாங்கம் முன்மொழிந்துள்ளது, இது பொதுச் செலவினங்களை அதிகரிக்க வழிவகுக்கிறது. கூடுதலாக, ஓய்வூதியதாரர்களின் சம்பள உயர்வு மற்றும் வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்களுக்கு மானியங்களை அதிகரிப்பதன் மூலம் அரசாங்கம் மாற்றல் கொடுப்பனவுகளை அதிகரித்தது.

   I) அரசாங்க செலவின வகைகளை விளக்குங்கள்.
   (05 புள்ளிகள்)

   II) அரசாங்க மாற்றல் கொடுப்பனவு வகைகள் யாவை?
   (05 புள்ளிகள்)

   III) அரசாங்க வருமானம் நிலையானதாக இருந்தால், மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியில் என்ன மாற்றங்களை எதிர்பார்க்கிறீர்கள்?
   (07 புள்ளிகள்)

IV) நிலையான வளர்ச்சியினை அடைவதற்கு பொருளாதாரத்தின் பிற துறைகளில் எவ்வகையான மாற்றங்கள் ஏற்பட வேண்டும்?

(08 புள்ளிகள்)

3. இலங்கை அண்மைக்காலத்தில் நிதி சீர்திருத்தங்கள், பண தளர்வு மற்றும் வெளிநாட்டு வர்த்தக சீராக்கங்களை செயல்படுத்தியுள்ளது, இது ஒட்டுமொத்த பொருளாதார மாற்றங்களை பகுப்பாய்வு செய்வதன் வளர்ந்து வரும் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது. இந்தக் கொள்கை நடவடிக்கைகள் மற்றும் வெளிநாட்டு அதிர்ச்சிகள் குறுகிய கால மற்றும் நீண்ட கால உற்பத்தி மற்றும் விலை நிலைகளை எவ்வாறு பாதிக்கின்றன என்பதைப் பற்றிய தெளிவான புரிதல், பேரினப் பொருளாதார செயல்திறன் மற்றும் எதிர்கால கொள்கை முடிவுகளை மதிப்பிடுவதற்கு அவசியமானதாகும்

I) குறுகிய கால மொத்த நிரம்பல் (SRAS) வளையி கிடையச்சுக்குச் சமாந்தரமாகவும், நீண்ட கால மொத்த நிரம்பல் (LRAS) வளையி நிலைக்குத்தச்சுக்குச் சமாந்தரமாகவும் இருப்பது ஏன் என்பதை விளக்குக.

(10 புள்ளிகள்)

II) பின்வரும் மாற்றங்களின் குறுகிய கால மற்றும் நீண்ட கால விளைவுகளை விளக்க, மொத்த கேள்வி (AD) மற்றும் மொத்த நிரம்பல் (AS) மாதிரியைப் பயன்படுத்தவும்:

a) அரசாங்க செலவினங்களில் அதிகரிப்பு

b) விரிவாக்கப் பணக் கொள்கை

c) இறக்குமதிகளில் அதிகரிப்பு

(ஒவ்வொன்றுக்கும் 5 புள்ளிகள்)

4. இலங்கை நிலையான பொருளாதார வளர்ச்சியை அடைவதில் சவால்களை எதிர்கொண்டுள்ளது. பல பேரினப்பொருளாதார குறிகாட்டிகள் உகந்த நிலைகளை எட்டவில்லை. வர்த்தக தாராளமயமாக்கல் மற்றும் சந்தை சார்ந்த சீர்திருத்தங்களை அமுல்படுத்தியதிலிருந்து, நாடு அதன் பொருளாதாரக் கொள்கையில் குறிப்பிடத்தக்க சவால்களைக் கண்டுள்ளது. இந்தக் காலகட்டத்தில், பணவீக்கம் நிலையற்றதாக இருப்பதனால் அது பொருளாதார உறுதிப்பாட்டுக்கு ஒரு தொடர்ச்சியான சவாலாகவே உள்ளது.

I) பணவீக்கம் என்றால் என்ன? ஒரு பொருளாதாரத்தில் பணவீக்கம் எவ்வாறு அளவிடப்படுகிறது என்பதை சுருக்கமாக விளக்குங்கள்.

(05 புள்ளிகள்)

II) பணவீக்கத்திற்கான முக்கிய காரணங்களைப் பற்றி கருத்துரைக்குக. உங்கள் பதிலில், ஒவ்வொரு காரணமும் பொது விலை மட்டம் மற்றும் ஒட்டுமொத்த பொருளாதார உறுதித்தன்மையை எவ்வாறு பாதிக்கிறது என்பதை விளக்குங்கள்.

(10 புள்ளிகள்)

III) பண நிரம்பல் வளர்ச்சிக்கும் பணவீக்கத்திற்கும் இடையிலான தொடர்பை விளக்குக. உமது விடையில் பணக் கணியக் கோட்பாட்டின் அடிப்படையில், பண நிரம்பலை அதிகரிப்பது எப்போதும் பணவீக்கத்திற்கு வழிவகுக்குமா என்பதைப் பற்றி விவாதிக்கவும்.

(10 புள்ளிகள்)

5. உலகின் பிற பகுதிகளுடனான அதன் கொடுக்கல்வாங்கல்களை பிரதிபலிப்பதன் மூலம், நாட்டின் பொருளாதார ஆரோக்கியத்தை சென்மதி நிலுவை (BOP) காட்டுகிறது. இலங்கையில், நாணய மாற்று விகிதத்தில் ஏற்படும் ஏற்ற இறக்கங்களுடன் சேர்ந்து, BOP இல் ஏற்படும் மாற்றங்களும் பொருளாதார உறுதித்தன்மையை பாதித்துள்ளன. இந்த மாற்றங்கள் பொருளாதாரக் கொள்கைகளை மேம்படுத்துவதற்கான வாய்ப்பையும் உருவாக்கி, வலுவான நிதி உறுதித்தன்மைக்கு வழிவகுக்கும்.

I) சென்மதி நிலுவை (BOP) என்றால் என்ன? அதன் இரண்டு முக்கிய கணக்குகள் மற்றும் அதன் கூறுகளை சுருக்கமாக விளக்குங்கள்.

(05 புள்ளிகள்)

II) நாணய மாற்று விகித முறை என்றால் என்ன? மூன்று வகையான நாணய மாற்று விகித முறைகளை சுருக்கமாக விவரிக்கவும்.

(08 புள்ளிகள்)

III) மெய் நாணய மாற்று விகிதம் என்றால் என்ன? அது பெயரளவு மாற்று விகிதத்திலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது? மெய் நாணய மாற்று விகிதத்தில் ஏற்படும் மாற்றங்கள் ஒரு நாட்டின் வர்த்தக நிலுவை மற்றும் ஒட்டுமொத்த பொருளாதாரத்தை எவ்வாறு பாதிக்கும் என்பதை விவாதிக்கவும்.

(12 புள்ளிகள்)

6.

I) நவீன பொருளாதாரத்தில் மத்திய வங்கியின் பிரதான நோக்கங்களைப் பற்றிக் கருத்துரைக்கவும். உங்கள் விடையினை பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக.

(08 புள்ளிகள்)

II) மத்திய வங்கியால் செய்யப்படும் முக்கிய செயல்பாடுகளை பரிசீலிக்கவும். இந்த செயல்பாடுகள் மத்திய வங்கியை வணிக வங்கிகளிலிருந்து எவ்வாறு வேறுபடுத்துகின்றன?

(08 புள்ளிகள்)

III) மத்திய வங்கி அதன் பணக் கொள்கை கருவிகள் மூலம் பொருளாதார உறுதித்தன்மையைப் பேணுவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. மேலுள்ள கூற்றுடன் நீர் உடன்படுகிறீரா? உமது பதிலை விளக்குக.

(09 புள்ளிகள்)

7.

I) ஒரு பொருளாதாரத்தில் காணப்படும் முக்கிய வேலையின்மை வகைகளை விவரிக்கவும். இந்த வகையான வேலையின்மைகள் எவ்வாறு உருவாகிறன?

(08 புள்ளிகள்)

II) அதிக வேலையின்மை ஏன் ஒரு கடுமையான பொருளாதாரப் பிரச்சினையாகக் கருதப்படுகிறது?

(08 புள்ளிகள்)

III) இலங்கையில் வேலையின்மையின் சமூக மற்றும் பொருளாதார விளைவுகளை விமர்சன ரீதியாக மதிப்பிடுங்கள்.

(09 புள்ளிகள்)